பக்கங்கள் 21 + 09

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 18 செவ்வாய்க்கிழமை 03.09.2024 | அதிர்வு 33

## சரவணபவனின் திட்டத்துக்கு இரண்டரைக் கோடி ரூபா நிதி

### ரணிலின் அடுத்த மீறல் அம்பலம்

(ந.லோகதயாளன்)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வேண்டுகோளின் பெயரில் யாழ்ப்பாணம்

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# மாகாண சபைத் தேர்தல் சட்டம்: காலைவாரிக் கவிழ்த்தார் ரணில்

## தன்னைத் தமிழரசு ஆதரிக்காமையால் கடைசி நேரத்தில் ஆப்படித்தார் அவர்

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்காகப் பழைய தேர்தல் சட்டங்களை அப்படியே மீள நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான சட்டமூலம் இன்று நாடாளுமன்றத்தில் இறுதிக்கட்டமாகநிறைவேறஇருக்கையில் அதற்கு ஆப்படித்துத் தடுத்துள்ளது ரணிலின் அரசு.

04

# “ரணில் ஓர் இனவாதி” சுமந்திரன் கடும் காட்டம்



## தமிழர்களைக் கடைசி நேரத்தில் பழி வாங்கிவிட்டார் எனவும் சீற்றம்

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாது இறுதித் தருணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தடுத்துள்ளதன் மூலம் அவர் ஓர் இனவாதி என்பதை நிரூபித்துள்ளதுடன், தமிழர்களைப் பழிவாங்கியும் விட்டார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று செவ்வாய்க்கிழமைவிசேடகூற்றொன்றைமுன்வைத்து உரையாற்றிய சுமந்திரன் எம்.பி.,

“என்னால் தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பான இரண்டாவது வாசிப்பு நாடாளுமன்றில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

குறித்த திருத்தச் சட்டமூலம் இன்றைய தினம் மூன்றாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

நேற்றைய தினம் நான் ஜனாதிபதிக்குத் தொலைபேசியில் அழைப்பு எடுத்த போது, மூன்றாம் வாசிப்புக்காக இந்தத் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும், சபாநாயகருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்துவதாகவும் கூறினார்.

04

# தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது தமிழ் மக்கள் அனைவரினதும் தேசிய கடமை

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் சுட்டிக்காட்டு







(எஸ்.நிதர்ஷன்)

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரனின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்ப் பொது வேட்பாளரின் அலுவலகத்தில் வைத்து தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படது.

இந்த நிகழ்வில் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

தேர்தல் விஞ்ஞாபனத்தின் முழு விபரம் வருமாறு:-

"தமிழ்த் தேசிய இனமானது கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக விடுதலைக்காகப் பல்வேறு வழிமுறைகளில் போராடி வருகிறது. இப் போராட்டத்தின் ஒரு வழிமுறையாகத், தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு ஆகிய நாம் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தியுள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் சங்குச் சின்னத்தின் கீழ் தமிழ்ப்பொது வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு என்பது தமிழ்த் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பாகும்.

தமிழீழ விடுதலை இயக்கம் , தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆகிய ஏழு கட்சிகளும் தமிழர் தாயகத்தைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர்கள், கருத்துருவாக்கிகள், புத்திஜீவிகள், சிவில் சமூகங்கள், அரசசார்பற்ற அமைப்புகள், தொழிற்சங்கங்கள், கிராமமட்ட அமைப்புகள், தொழில்சார் அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகள், மாணவ அமைப்புகள் இணைந்து உருவாக்கிய மக்கள் அமைப்பாகிய தமிழ்மக்கள் பொதுச் சபையும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பே தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்பு ஆகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உள்ள மிகச்சிறு பகுதியினர் தவிர ஏனைய அனைவரும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகிறார்கள்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு எனப்படும் இந்தக் கூட்டணி கடந்த 15 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட கூட்டணிகளில் ஒப்பீட்டளவில் பெரிய அணியாகும். இது தமிழ் ஒற்றுமையின் புதிய நம்பிக்கையாகவும் எதிர்காலத் தமிழ் அரசியலுக்கான பலமான அடித் தளமாகவும் எழுச்சி பெறும்.

ஈழத்தமிழர்களாகிய நாம் இலங்கைத் தீவில் தனித்துவம் மிக்க ஒரு தேசிய இனமாகவும், தேசமாகவும் வாழ்ந்து வருகிறோம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட, மரபு வழித் தாயகத்தைக் கொண்ட, தனித்துவமிக்க பண்பாட்டைக் கொண்ட ஒரு தேசம் ஆவோம் இலங்கைத் தீவு பல்லின, பலமத, பல மொழி, பல் கலாசாரத்தைக் கொண்ட ஒரு தீவாகும். இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ள மறுத்ததன் விளைவே இனப்பிரச்சினை தோற்றம் பெறுவதற்கும் கூர்மை அடைவதற்கும் இறுதியில் விஸ்வரூபம் எடுப்பதற்குமான மூல காரணமாகும். தமிழ் மக்களுடைய தேசிய இருப்பை அழிக்கும் செயற்பாடுகளே இன அழிப்பாகும்.

தமிழர் தேசத்தின் இருப்பையும் தனித்துவத்தையும் அழித்து பெரும்பான்மை இனத்துடன் அதனைக் கரைக்கும் உள்நோக்கத்தோடு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது திட்டமிட்டு முன்னெடுத்த இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகத் தமிழ் மக்கள் முதலில் அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுத வழியிலும் போராடினார்கள். அப்போராட்டங்களை நிர்மூலமாக்கும் குறிக்கோளோடு ஏவி விடப்பட்ட அரச பயங்கரவாதத்தின் மிகக் கொடிய விளைவே இறுதிப் போரில் நிகழ்ந்த உச்சமான இன அழிப்பாகும்.

இந்தப் பின்னணியில் உலகின் மிகப்பெரிய தமிழ் சட்டமன்றமாகிய தமிழக சட்டமன்றம் இலங்கைத் தீவில் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்றது. இன அழிப்பு என்று ஏகமனதாகத் தீர்மானமாக நிறைவேற்றியது. வட மாகாண சபை அதை இன அழிப்பு என்று ஏகமனதான ஒரு தீர்மானமாக நிறைவேற்றியது. கனடாவில் பிரம்டன் நகர சபை அதை இன அழிப்பென்று ஏகமனதான ஒரு தீர்மானமாக நிறைவேற்றியது. கனேடிய நாடாளுமன்றம் மே பதினெட்டினைத் தமிழ் இனப்படுகொலை நினைவுகூரல் நாளாக ஏகமனதாக ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றியது. பிரான்சில் உள்ள நான்கு மாநகர சபைகள் அது இன அழிப்பு என்று தீர்மானமாக நிறைவேற்றின. ஐக்கிய அமெரிக்கப் பிரதிநிதிகள் சட்ட சபையில் இந்த ஆண்டு மே15 அறிமுகப்படுத்தப்பட்ட 1230 தீர்மானமானது ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் நடத்தப்பட்டது இனஅழிப்பு என்பதை ஏற்றுக்கொள்கின்றது. ஈழத் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைக் காணும் பொருட்டு சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, அவர்கள் தங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்கு ஒரு பொது வாக்கெடுப்பு அவசியம் என்பதை அத் தீர்மானம் வலியுறுத்துகின்றது.

(07ஆம் பக்கம் பார்க்க)



# வவுனியாவில் சஜித்தின் பரப்புரைக் கூட்டம்

**(வவுனியா நிருபர்)**

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பிரச்சாரக் கூட்டம் வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள யங்ஸ்டார் விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெற்றது.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து அழைத்து வரப்பட்ட 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அர்ஜுன ரணதுங்க, ரிஷாத் பதியுதீன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹிருணிகா பிரேமச்சந்திர, /ஹனைஸ் பாரூக், ஐக்கிய மக்கள் சக்தியின் வவுனியா அமைப்பாளர்களான சா.நிரோஸ்குமார், றசிக்கா பிரியதர்சினி, கருணாதாஸ மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.











# வவுனியாவில் சஜித்தின் பிரச்சாரத்தைக் கண்காணித்த ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர்

(கே.வசந்தன்)

வவுனியா, வைரவப்புளியங்குளத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்துக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் வருகை தந்து கண்காணித்து இருந்தனர்.

அங்கு இன்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரச் செயற்பாடுகள் மற்றும் கலந்துகொண்ட மக்களுடைய செயற்பாடுகள் தொடர்பிலும் அவர்கள் அவதானம் செலுத்தியிருந்தனர். அத்துடன், கூட்டத்தில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்களுடனும் அவர்கள் கலந்துரையாடி கூட்டம் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக் கொண்டனர்.



அவர்கள் புகைப்படங்களையும் எடுத்துக்கொண்டதுடன் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அரசியல்வாதிகளாலும், ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவினாலும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் தொடர்பிலும் அவர்கள் குறிப்புக்களை எடுத்துக்கொண்டதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மாகாண சபை...

வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தமக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுக்காமல் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவான முடிவை எடுத்து அறிவித்தமையை அடுத்து முழுத் தமிழர்களுக்கும் அதிகாரப் பகிர்வை வழங்கும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தாமல் தடுக்கும் தனது அரசின் கைங்கரியத்தை ரணிலின் அதிகார பீடம் இன்று முன்னெடுத்திருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த நல்லாட்சி அரசின் காலத்தில் - 2017 இல் - அப்போது நடைமுறையில் இருந்த மாகாண சபைத் தேர்தல் சட்டம் இல்லாதொழிக்கப்பட்டது. ஒரு வருடத்துக்குள் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டு, மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார். ஆனால், அந்தச் சட்டம் கொண்டுவரப்படவில்லை.

அதனால் கடந்த எட்டு வருடங்களாக மாகாண சபைகள் தேர்தல்கள் நடைபெறாமலேயே இழுபடுகின்றன. இதனால் பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்து மாகாண சபைத் தேர்தல்களை நடத்தலாம் என்று யோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்கமைய பழைய மாகாண சபைகள் சட்டத்தை மீள நடைமுறைக்குக் கொண்டு வர வழிவகுக்கும் மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டம் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்பட்டது.

அது தொடர்பான இரண்டாவது வாசிப்பு நாடாளுமன்றில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் நிலைமை வரை முன்னேறியது.

அந்தத் திருத்தச் சட்டமூலம் இன்றைய தினம் மூன்றாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு முழுமையாக நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்தார்.

நேற்றைய தினம் இது குறித்து சுமந்திரன் ஜனாதிபதிக்கு அழைப்பு எடுத்துப் பேசியபோது, மூன்றாம் வாசிப்புக்காக இந்தத் திருத்தச் சட்டமூலத்தை இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும், சபாநாயகருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்துவதாகவும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஆனால், இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் வேறு வேட்பாளர் ஒருவரை ஆதரிக்கத் தீர்மானம் எடுத்தமையால் இதனை இன்றைய நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்வாங்காது ஜனாதிபதி தடுத்துள்ளார்.

இந்த விடயம் நாடாளுமன்றத்தின் ஒக்டோபர் இரண்டாம் வார நிகழ்ச்சி நிரலுக்கு பின்தள்ளப்பட்டது.

தற்போதைய ஜானாதிபதித் தேர்தல் முடிவுகளுடன் நாடாளும்மன்றம் கலைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால் இந்தச் சட்டமூலம் பெரும்பாலும் இத்தோடு செயலிழந்து போகும், நடைபெறாமல் இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும் முயற்சி இப்போதைக்குச் சரிவராது என்று கருதப்படுகின்றது.

## சரவணபவனின்...

மாவட்டத்துக்கு 2 கோடி 50 இலட்சம் ரூபா விசேட நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளின் பெயரில் அனுமதிக்கப்படும் விசேட நிதி ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர் அல்லாத விஜயகலா மகேஸ்வரனுக்கு 19 கோடி ரூபா நிதி அனுமதிக்கப்பட்டது.

இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் அல்லாத ஈ.சரவணபவனின் திட்டத்துக்குத் தற்போது 2 கோடி 50 இலட்சம் ரூபா நிதி யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட இந்த 2 கோடி 50 இலட்சம் ரூபா நிதிக்கான எழுத்து மூலமான அனுமதிக் கடிதம் மாவட்ட செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 2024.07.26 அன்று வர்த்தமானி வெளியீடு செய்தமையால் 2024.07.25 ஆம் திகதிய கடிதம் 2024.08. 22 அன்றே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் எம்.பி. சரவணபவனின் அலுவலகத்துக்கும் விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## "ரணில் ஓர் இனவாதி"...

ஆனால், இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் வேறு வேட்பாளர் ஒருவரை ஆதரிக்கத் தீர்மானம் எடுத்தமையால் இதனை இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்வாங்காது தடுத்துள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்காமையால் தமிழர்களை ரணில் பழிவாங்கியுள்ளா.

ரணில் விக்கிரமசிங்க தமது காலத்தை முடிக்கும் தருணத்தில் ரணில் ராஜபக்ஷ என்று நிரூபித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க இனவாதியாக தமிழ் மக்கள் முன்பும் இந்த நாட்டு மக்கள் முன்பும் காட்டப்படுவார்.

தமிழ் மக்களுக்கு எதிராக அவர் செய்யும் இந்த விடயம் இனவாதியாகக் காட்டிக்கொள்ளவே. தமிழ் மக்களுக்குப் பல வாக்குறுதிகளை அவர் கொடுத்துள்ளார். ஆனால், எதனையும் அவர் செய்யவில்லை.

கடைசி நேரத்தில் எம் மக்கள் மீது வெறுப்பைக் காட்டும் செயற்பாடாகவே இதனை நாம் பார்க்கின்றோம்." - என்றார்.

# மனைவியை மீட்டுத் தருமாறு கோரி மரத்தில் ஏறி குடும்பஸ்தர் போராட்டம்

## வவுனியா பொலிஸ் நிலையம் முன்பாகப் பரபரப்பு








(கே.வசந்தன்)

தனது மனைவியை மீட்டுத் தருமாறு கோரி குடும்பஸ்தர் ஒருவர் வவுனியா பொலிஸ் நிலையம் முன்பாக மரத்தில் ஏறிப் போராட்டம் நடத்தியமையால் நகரில் பரபரப்பு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் இன்று காலை இடம் பெற்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை (வயது 30) வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள மரத்தில் ஏறி கீழே இறங்கமால் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். தனது மனைவி தன்னைவிட்டுப் பிரிந்து சென்றுள்ளார் எனவும், அவைரச்சேர்த்து வைக்குமாறே இவ்வாறு மரத்தில் ஏறி அவர் போராடியிருந்தார்.

அவர் நீண்ட நேரமாக மரத்தில் இருந்து இறங்காமல் இருந்தமையால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் பொலிஸா ர் மற்றும் ஏனைய தரப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க அவர் மரத்தில் இருந்து கீழே இறங்கிச் சென்றிருந்தார்.

# மஸ்கெலியாவில் குளவி கொட்டி 6 பெண்கள் வைத்தியசாலையில்

(மஸ்கெலியா நிருபர்)

தேயிலை மலையில் கொழுந்து கொய்து கொண்டிருந்த 6 பெண் தோட்டத் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

மஸ்கெலியா நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்சபான தோட்ட பகுதியிலேயே இன்று முற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குளவிக்கொட்டால் பாதிக்கப்பட்டவர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இருவர் சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ளனர் எனவும், ஏனைய நால்வரும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பாவம் நாமல்!

'எல்லோரும் ஏறி விழுந்த நொண்டிக் குதிரையில் சக்கடத்தார் தானும் ஏறி விழுந்தாராம்' என்ற விவகாரம் மாதிரி இந்த இள வயதில் பௌத்த - சிங்களப் பேரின வெறிப்போக்கைத் தனது அரசியல் பாதையாக தேர்ந்தெடுத்து, வரித்துக் கொண்டு நகர முற்பட்டிருக்கும் மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ கடைசியில் அதிலேயே விழுந்தடிக்கப் போகின்றார் என்பதுதான் நிச்சயம்.

பதவிக்கு வருவதற்கும், அதிகாரத்தப் பெறுவதற்கும், எண்ணிக்கையில் மிக அதிகமான பௌத்த - சிங்கள மக்களின் வாக்குகளை இலகுவாகச் சுருட்டுவதற்கும், பேரினவாத - மேலாதிக்க வெறியைத் தூண்டும் உணர்வுபூர்வமான எழுச்சி, அவருக்கு அரசியல் ரீதியாக உதவக் கூடும்.

ஆனால் அதன் விளைவுகள்தாம் என்ன?

அதனால் நாட்டுக்கும், மக்களுக்கும், இலங்கை சமூகத்துக்கும் நேரப்போகும் விளைவுகள், ஆபத்துக்கள், பாதிப்புகள் ஒருபுறம் இருக்கட்டும். அந்தப் பேரினவாதத்தைக் கிளப்பிய அரசியல் தரப்புக்களின் கதி என்னவாயிற்று என்ற கடந்த கால அனுபவத்தைப் புரட்டிப் பார்க்காமல், அந்த நொண்டிக் குதிரையில் ஏறி பயணிக்க புறப்பட்டிருக்கின்றார் இளம் அரசியல்வாதியான நாமல் ராஜபக்ஷ.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவிலிருந்து கடைசியாக பேரினவாதத்தை மோசமாகக் கிளப்பிய தமது சித்தப்பா கோட்டாபய ராஜபக்ஷ வரை அதே பேரினவாதத்திற்கு சுருண்டு போன கதையை நாமல் ராஜபக்ஷ எண்ணிப் பார்க்காமல் இந்த அரசியல் சூதாட்டத்தில் இறங்கி இருக்கின்றார் என்றே தோன்றுகின்றது.

பேரினவாத வெறியைத் தூண்டி, அந்தக் குறுக்கு வழியில் அதிகாரத்தை இலகுவாகப் பிடித்த பண்டாரநாயக்கா, பின்னர் அதிலிருந்து மீண்டு வர முடியாமல் அந்த மேலாதிக்க வெறியின் சூழ்ச்சிக்கே தம்மைப் பலி கொடுக்க வேண்டியவரானார்.

அதே பேரினவாதத்தைத் தூண்டி, கொழுந்து விட்டு எரிய வைத்து, அதில் பெருவெற்றிக் களிப்பை எட்டிய கோட்டாபய ராஜபக்ஷ, உச்சப்பட்ச நிறைவேற்றதிகாரங்களை அதன் மூலம் சுவீகரித்து வைத்துக் கொண்டு, அந்தப் பாதையில் பயணித்த போது, தெரிவு செய்த அதே மக்களால் நடுவழியில் பதவியில் இருந்து ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டார்.

ஆனாலும, தென்னிலங்கைச் சிங்கள அரசியல்வாதிகள்அந்தப்பாடத்திலிருந்து - பட்டறிவிலிருந்து - உரியதை உணர்ந்து திருந்துபவர்களாக இல்லை என்பது நாமல் ராஜபக்ஷவின் நடவடிக்கை மற்றும் அணுகுமுறை மூலம் உறுதியாகி இருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மற்றைய மூன்று பிரதான வேட்பாளர்களும் வழமைக்கு மாறாக பேரினவாத வெறிப்போக்கைத் தூண்டாமல், சிறுபான்மையினரது வாக்குகளையும் வளைத்துப் பிடித்து சுரண்டிக் கொள்ளத் தீவிரம் காட்ட, பௌத்த - சிங்கள தீவிரப் போக்குடையவர்களின் வாக்குகள் அணுகப்படாமல் இருக்கின்றன, அவற்றைச் சுருட்டுவோம் என்று புறப்பட்டிருக்கின்றார் நாமல் ராஜபக்ஷ.

ஆனால் இது மிகவும் ஆபத்தான அரசியல் நகர்வு. 'கரணம் தப்பினால் மரணம்' என்ற சர்க்கஸ் விளையாட்டுக்கு ஒப்பானது.

இன்று இந்தப் பேரினவாதப் பாதையை, போக்கை, அப்பட்டமாக - வெளிப்படையாக - பகிரங்கமாக - கையில் எடுத்து, அதன் வழியில் பயணித்தால், பிற்காலத்தில் என்றோ ஒருநாளில் தப்பித்தவறி அதிகாரம் கையில் கிடைத்து, பதவியில் அமரும் போது, இந்தப் பேரினவாத மேலாதிக்கம் இடித்துக் கொண்டு வந்து, தலையை நீட்டிக்கொண்டு இடைஞ்சலாக முன்நிற்கும். அப்போது அது சொல்லும் - காட்டும் - வழியில் செயற்பட்டு அழிவதை தவிர வேறு மார்க்கம் இல்லாமல் போகும்.

பண்டா முதல் கோட்டா வரை அது தான் அனுபவம். அதையே தேடிப் பெற விழைகின்றார் நாமல் ராஜபக்ஷ. பாவம் அவர்!

# தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது
# தமிழ் மக்கள் அனைவரினதும் தேசிய கடமை





தொடர்ச்சி▲

எனினும், இன்றுவரை இன அழிப்புக்கு பரிகார நீதியும் கிடைக்கவில்லை இன அழிப்புச் செயற்பாடுகள் நிறுத்தப்படவுமில்லை. மாறாக,

1. திருகோணமலையில் தமிழர் மரபுரிமைச் சின்னங்கள் இருந்த இடங்கள் தொல்லியல் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு அவ்விடங்கள் வேகமாக சிங்கள பௌத்த மயமாக்கப்படுகின்றன.

மேலும், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் அளவில் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு 26 க்கும் அதிகமான விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சில பாரம்பரிய தமிழ்க் கிராமங்களை சிங்கள மாவட்டங்களுடன் இணைத்து வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் பல நீதிமன்றத் தீர்ப்புகளை மீறுபவை. இனஅழிப்பு நடவடிக்கைகளால் அதிகம் விழுங்கப்பட்ட ஒரு மாவட்டம் இது.

2. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு புறம் சிங்கள பௌத்த மயமாக்கல் நடந்து வருகிறது. இன்னொரு புறம் நிலப்பறிப்பு தொடர்கிறது. உதாரணமாக 3000 குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான கால்நடை சார்ந்த பொருளாதாரத்தை அழிக்கும் நோக்கத்தோடு மயிலத்தமடு, மாதவனை போன்ற இடங்களில் மேய்ச்சல் தரைகளை அரச அனுசரணையோடும் பாதுகாப்போடும் சிங்கள விவசாயிகள் ஆக்கிரமித்து வருகிறார்கள். இங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகள் மீறப்படுகின்றன.

வாகரை, கதிரவெளியில் கனிமவள அகழ்வு மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படுகின்றது. வாகரையில் இறால் பண்ணைகள் மக்களுடைய எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படுகின்றன. இவ்விரண்டு விடயங்களும் மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதிப்பவை. சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு எதிரானவை.

4. அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவை முழுமையான ஒரு பிரதேச செயலர் பிரிவாகத் தரம் உயர்த்துமாறு தமிழ்மக்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். இன்றுவரை ஆட்சிக்கு வந்த எந்த ஓர் அரசாங்கமும் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை. இனஅழிப்பு நடவடிக்கைகளால் அதிகம் விழுங்கப்பட்ட மற்றொரு மாவட்டம் இது.

5. வடக்கில் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் குருந்தூர் மலை, வெடுக்கு நாறிமலை, நீராவியடி ஆகிய இடங்களில் தமிழ் மரபுரிமைச் சின்னங்கள் அமைந்திருக்கும் சிறுமலைகளில் அரச திணைக்களங்களும் பிக்குகளும் அரச படையினரும் பௌத்த கட்டுமானங்களை உருவாக்கி வருகிறார்கள். அங்கேயும் நீதிமன்றத் தீர்ப்புகள் மீறப்படுகின்றன. இக்கட்டளைகளை வழங்கிய ஒரு நீதிபதி நாட்டைவிட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அதற்காக வெட்கப்படவேண்டிய அரசாங்கம் அவரைத் தனிப்பட்ட முறையில் சிறுமைப்படுத்தியது.

முல்லைத்தீவில் உள்ள கொக்குத்தொடுவாயில் மேற்கொள்ளப்படும் மனிதப் புதைகுழி அகழ்வானது பன்னாட்டு நிபுணர்களின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறவில்லை.

யுத்தம் முடிவடைந்த பின்னர் முல்லைத்தீவில் மட்டும் 67 பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவில் பொதுமக்கள் மற்றும் இராணுவம் இடையிலான விகிதம் 2:1 ஆக இன்னமும் இருக்கின்றது. சுமார் 100 க்கும் மேற்பட்ட படையினர் முகாம்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் அமைக்கப்பட்டுள்ளன.

6. வவுனியா மாவட்டத்தில் கொக்கச்சான் குளம் என்ற தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் குடியிருப்பு இராணுவப் பாதுகாப்புடனும் அரச அனுசரணையுடனும் ஆக்கிரமிக்கப்பட்டு கலாபோபஸ்வேவ' என்ற பெயருடைய சிங்களக் கிராமமாக மாற்றப்பட்டு மிகக்குறுகிய காலத்துக்குள் அந்த கிராமத்துக்குத் தேவையான சகல உட்கட்டுமான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, அம்பாந்தோட்டையிலிருந்து கொண்டுவரப்பட்டவர்களை அரசின் அனுசரணையோடு குடியமர்த்தி 'நாமல்கம' என்ற ஒரு கிராமம் உருவாக்கப்பட்டுள்ளது.

7. மன்னார் மாவட்டத்தில், கனிமவளம் பறிக்கப்படுகின்றது. அங்குள்ள முள்ளிக்குளம் கிராமத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கும் ஸ்ரீலங்கா கடற்படையானது அக்கிராமத்தின் பூர்வ குடிகளான தமிழ் மக்களை அங்கு முழுமையாக மீளக் குடியமர விடாமல் தடுத்து வருகின்றது.

மன்னார் புதைகுழி தொடர்பான உண்மைகள் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை

8. கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழர் மரபுரிமைச் சொத்துகளை தொல்லியல் திணைக்களம் ஆக்கிரமித்து வருகின்றது.

9. யாழ்ப்பாண மாவட்டத்தில் படைத்தரப்பு முகாம்களை அமைத்திருக்கும் பெரும்பாலான காணிகள் தனியாருக்குரியவை. இவற்றுள் மிகச்சிறிய நிலப்பரப்புத்தான் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்திலும் தமிழர் மரபுரிமைச் சொத்துக்கள் பல ஆக்கிரமிக்கப்பட்டு சிங்கள பௌத்த மயமாக்கப்பட்டுள்ளன.

நாவற்குழியில் அரசின் அனுசரணையோடு ஒரு சிங்களக் குடியேற்றம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தையிட்டியில் தனியார் காணியில் சட்டவிரோதமாக ஒரு புதிய விகாரை படையினரால் கட்டப்பட்டுவிட்டது.

10. தமிழர் தாயகம் எங்கும் தனியார் காணிகள் படையினரால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே அபகரிக்கப்பட்ட தனியார் காணிகள் பல இதுவரை விடுவிக்கப்படவில்லை. ஆனால் பெரும்பகுதி விடுவிக்கப்பட்டு விட்டதாக அரச புள்ளி விபரங்கள் பொய் கூறுகின்றன.

தமிழர் தாயகமெங்கும் வனவளத் திணைக்களமும், வனஜீவராசிகள் திணைக்களமும் காடுகளின் பாதுகாப்பு, வனஉயிரினங்களின் பாதுகாப்பு என்ற பெயரில் தனியார் காணிகள், பயிர்ச் செய்கை நிலங்கள், வணக்கத்தலங்கள் உள்ளடங்கிய பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் அளவு நிலத்தை அபகரித்து வைத்திருக்கின்றன.

மேற்குறிப்பிடப்பட்டவை சில உதாரணங்கள் மட்டுமே. கடந்த 15 ஆண்டுகளாக நிலப்பறிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும் அரசுக் கொள்கையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன

11. புனர்வாழ்வின் பின் விடுவிக்கப்பட்ட முன்னாள் இயக்கத்தவர்கள் 15

தொடர்ச்சி▼

# தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது
# தமிழ் மக்கள் அனைவரினதும் தேசிய கடமை




தொடர்ச்சி▲

ஆண்டுகளின் பின்னரும் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களின் மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள்.

12. தமிழ் மக்களின் அரசுக்கு எதிரான செயற்பாடுகளைப் பயங்கரவாதமாகச் சித்திரிக்கக்கூடிய வாய்ப்புகளைக் கொண்டிருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் தமிழ் மக்களின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கின்றது

13. அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. மாறாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுவது முழுமையாக நிறுத்தப்படவும் இல்லை.

14. மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறைகளும் அச்சுறுத்தல்களும் தொடர்கின்றன.

15. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வருகின்றது. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. வலிந்து காணாமல்போகச் செய்யப்பட்டவர்களுக்கான சர்வதேச தினமாகிய கடந்த ஓகஸ்ட் முப்பதாம் திகதியன்று திருகோணமலையில் நடந்த எதிர்ப்பு பேரணியில் கலந்துகொண்ட உறவினர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் மீது அரச பயங்கரவாதமானது பொலிஸ் நடவடிக்கை என்ற வடிவத்தில் ஏவி விடப்பட்டது. நீதிமன்ற கட்டளையின் கீழான இச்சட்ட நடவடிக்கை மூலம் அப்பேரணி குலைக்கப்பட்டது.

இவ்வாறு கட்டமைக்கப்பட்ட இன அழிப்புச் செயற்பாடுகள் தமிழர் தாயகமெங்கும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களின் தாயகத்தின் நிலத் தொடர்ச்சியைத் துண்டாடுவது, இன விகிதாசாரத்தைக் குறைப்பது, நிலத்தைப் பறிப்பது, தமிழ் மரபுரிமைச் சின்னங்களை அழிப்பது, அங்கே சிங்கள பௌத்த மரபுரிமைச் சின்னங்களை ஸ்தாபிப்பது போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் வெவ்வேறு வடிவங்களே.

இந்த நடவடிக்கைகள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாத தன்மையைக் கொண்டவை. ஸ்ரீலங்கா அரசு என்ற மையத்திலிருந்து உள்நோக்கத்துடன் திட்டமிடப்படுகின்றவை. தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனவளத் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் ஆக்கிரமிப்பைப் பகலில் சட்டரீதியாகச் செய்கின்றன. பிக்குகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் முன்னணியில் நிற்கிறார்கள். அவர்கள் சட்டத்தையோ நீதிமன்றத்தையோ காவல்துறையையோ மதிப்பதில்லை. படையினர் இரவுகளில் பௌத்த கட்டுமானங்களை இரகசியமாகக் நிர்மாணிக்கின்றார்கள்.

நிலப்பறிப்பு, சிங்களபௌத்தமயமாக்கல், அரசின் அனுசரணையுடனான குடியேற்ற நடவடிக்கைகள் போன்ற நடவடிக்கைகளில் படைத்தரப்பு ஒரு சமாந்தரமான அரசைப் போல செயற்படுகின்றது. அதில் வடக்கு, கிழக்கில் மட்டும் 65 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது

இனவழிப்புச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் அதேவேளை நாட்டில் பொருளாதாரப் பிரச்சினைதான் உண்டு என்று பொய்யான தோற்றத்தைக் கட்டியெழுப்பி பன்னாட்டு சமூகத்தை நம்ப வைக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமறுத்து இன அழிப்பு யுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுத்த காரணத்தாலேயே நாடு கடனாளியாகியது. எனவே, இப்பொழுது நாட்டை பிடித்துலுப்பும் பொருளாதார நெருக்கடிக்கு மூலகாரணம் யுத்தத்திற்காகப் வாங்கிய கடன் சுமைதான்.

இப்பொழுது தென்னிலங்கையில் வேட்பாளர்களாகக் களமிறங்கியுள்ள அனைவரும் பொருளாதார நெருக்கடி எனப்படுவது இனப்பிரச்சினையின் விளைவுதான் என்பதனை மறைக்கின்றனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கமுடியாது என்ற ஆழமான உண்மையை எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய பரப்புரையின் குவிமையமாக இருப்பது நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து எப்படி மீட்டெடுப்பது என்பதுதான். இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காகத் தமிழ் மக்களால் ஏற்கத்தக்க பொருத்தமான முன்மொழிவு எதனையும் அவர்களில் யாரும் இதுவரை முன்வைக்கவில்லை.

யுத்த தளபாடங்களுக்காக முன்பிருந்த அரசாங்கங்கள் 25 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களைச் செலவழித்துள்ளதாக இந்திய பாதுகாப்புத்துறை சார்ந்த ஒரு நிபுணரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்தப் பணத்தைச் செலவழித்து முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட உயிரழிவு, பொருள் அழிவைக் குறித்து இதுவரையிலும் உத்தியோகபூர்வ மதிப்பீடு எதுவும் இலங்கை அரசாங்கத்தால் செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த அழிவுகளில் இருந்து தமிழ் மக்களை மீட்டெடுப்பதற்கான எந்த ஒரு சிறப்பு செயல்திட்டமும் இன்று வரையிலும் உருவாக்கப்படவுமில்லை.

யுத்தத்துக்காகப் படையினரின் ஆட்தொகை பல இலட்சமாக அதிகரிக்கப்பட்டது. இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 40 விகிதம் படையினருக்கே செலவழிக்கப்படுகிறது. இலங்கைத்தீவின் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் மொத்தச் சம்பளத்தில் ஏறக்குறையச் சரிபாதி படையினருக்கான சம்பளமாக வழங்கப்படுகிறது.

கடந்த 15 ஆண்டுகளிலும் படைத்தரப்பின் ஆட்தொகை குறிப்பாக வடக்கு கிழக்கில் குறைக்கப்படவில்லை. அதாவது இராணுவமய நீக்கம் நிகழவில்லை. மாறாக, தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழர் தாயகத்தை சிங்கள பௌத்த மயப்படுத்தும் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்காகவே படைத்தரப்பு பெருஞ் செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான இராணுவ பொருளாதாரச் சூழலுக்குள் புலம் பெயர்ந்த தமிழர்கள் முதலீடு செய்யத் தலைப்பட்ட மாட்டார்கள். அண்மைக் காலங்களில் அதிகரித்த அளவில் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வருகிறார்கள். தற்போது புலம்பெயர்பவர்கள் படித்தவர்கள்,

தொடர்ச்சி▼

# தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது

# தமிழ் மக்கள் அனைவரினதும் தேசிய கடமை

**தொடர்ச்சி▲**

சமூகத்தில் பொறுப்பான பதவிகளை வகித்தவர்களே. இப்படிப்பட்ட தலைமை தாங்கும் தகைமையுள்ள படித்தவர்கள் சமூகத்தில் இருந்து வெளியேறுவது எதிர்காலத்தில் தமிழ் மக்களின் அரசியலில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இவ்வாறான இராணுவப் பொருளாதார சூழலுக்குள் தமிழ் மக்கள் மத்தியில் கூட்டுணர்வையும் நம்பிக்கையையும் தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்ப வேண்டியது அவசியம். அதேசமயம் இனப்பிரச்சினைக்கான தீர்வின் அவசியத்தையும் அவசரத்தையும் தென்னிலங்கைக்கும் உலக சமூகத்துக்கும் நிராகரிக்கப்பட முடியாத விதத்தில் உணர்த்த வேண்டியதும் அவசியம்.

தமிழ் மக்களுக்கு பொருளாதாரப் பிரச்சினைகள்தான் உண்டு என்று தொடர்ச்சியாக ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் கூறிவரும் ஒரு பின்னணியில் இனப் பிரச்சினையைப் பேசுபொருளாக்கி அதன்மீது தென்னிலங்கையின் கவனத்தையும் உலகத்தின் கவனத்தையும் ஈர்க்கும் நோக்கத்தோடு, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினராகிய நாம் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளராக திரு.பாஅரியநேத்திரன் அவர்களை முன் நிறுத்துகிறோம்.

கடந்த 46 ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் யாரோ ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களித்து வந்திருக்கிறார்கள். 2009க்குப் பின் 3 ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ்மக்கள் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். இவர்களில் வென்றவர்களும் சரி தோற்றவர்களும் சரி இன்றுவரையிலும் இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்வைத் தரவும் இல்லை இன அழிப்புச் செயற்பாடுகளை நிறுத்தவும் இல்லை.

கடந்த 46 ஆண்டுகளாக ஜனாதிபதித் தேர்தல்களில் தென்னிலங்கை வேட்பாளர்களுக்கு பதில் வினையாற்றும் அணுகுமுறையில் இருந்து வேறுபட்டு இந்த முறை தமிழ்மக்கள் செயல்முனைப்போடு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது என்று எடுக்கப்பட்ட முடிவின் விளைவே தமிழ்ப் பொது வேட்பாளர் ஆகும்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தமிழ் மக்களை ஓரணியாகத் திரட்டுவார். அதேசமயம், இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கித் தமிழ் மக்களின் கூட்டு விருப்பத்தை உலக சமூகத்துக்கும் தென்னிலங்கைக்கும் வெளிப்படுத்துவார். இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியையும் கோருவார்.

இந்த அடிப்படையில், தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பானது இனப் பிரச்சனைக்கான நிரந்தர தீர்வானது பின்வரும் அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று உறுதியாக வலியுறுத்துகின்றது.

1. இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தோடு உருவாக்க வேண்டிய இலங்கைத்தீவின் புதிய யாப்பானது தமிழ் மக்களை இறைமையும் சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2. தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டால்தான் இலங்கைத் தீவின் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்தலாம். எனவே புதிய யாப்பு ஆனது இலங்கைத் தீவின் பன்மைத் தேசியப் பண்பை உறுதிப்படுத்தும் விதத்தில் தேசங்களின் ஒன்றிணைவாக அமைய வேண்டும். அதாவது புதிய யாப்பானது இலங்கைத் தீவு ஒரு பன்மைத் தேசிய அரசாகக் கட்டமைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

3. ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்த ஒரு அரசியல் தீர்வாலும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகளை ஒருபோதும் திருப்திப்படுத்த முடியாது.

4. இந்த விடயத்தில் தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதனை தாமே நிர்ணயிப்பதற்குப் பொருத்தமான பன்னாட்டு ஏற்பாடுகளைக் கோருவதற்கு உரித்துடையவர்கள்.

5. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அலகானது ஒன்றிணைந்த தற்போதைய வடக்கு, கிழக்கு மாகாணங்களை எல்லையாகக் கொண்டு அமைய வேண்டும். குறித்த சுயநிர்ணய அலகிற்குள் முஸ்லிம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்த மனதோடு பேச்சுவார்த்தை நடத்த தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புத் தயாராக உள்ளது.

6. மலையகத் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தர தீர்வு வழங்கப்பட வேண்டும். மேலும் உடனடி பிரச்சினைகளுக்கு அவர்கள் தொடர்ச்சியாகக் கோரி வரும் தீர்வுகளும் வழங்கப்பட வேண்டும். இந்தத் தீர்வுகளுக்கான போராட்டத்தில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது மலையகத் தமிழர்களோடு தோளோடு தோள் நிற்கும்.

7. ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு நடத்திய இன அழிப்பு, போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப்புக்கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டு, பரிகார நீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகள் மீள நிகழாமையை உறுதி செய்ய வேண்டும். இதுவரையிலுமான ஐநா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் தொகுக்கப்பட்ட அனுபவமாக ஐநா பொதுச் செயலர் பொறுப்பு கூறலை ஐ.நா. பொதுச் சபையிடம் பாரப்படுத்துவதன் மூலம் இன அழிப்புக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றங்களிடம் பாரப்படுத்த வேண்டும்.

8. அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நிலப்பறிப்பைத் தடுக்கவும் நமது வளங்கள் இன அழிப்பின் ஒரு பகுதியாகச் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் தமிழர் தாயகத்தின் தேசிய வளங்களை இயற்கையின் சமநிலை குலையாத வகையில் வினைத்திறனுடன் பயன்படுத்தவல்ல தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்புக்களை நாம் உருவாக்க வேண்டும்.

இதற்கேற்ற வகையில் தமிழர் தாயகத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீடுகளையும் உள்வாங்கும் அதிகாரம் தமிழர் தேசத்துக்கு இருக்க வேண்டும்.

9. ஒரு நிரந்தரத் தீர்வைக் கண்டடைவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத்தோடும், தமிழர் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென்று பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வையின்கீழ் விசேட இடைக்காலப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் நிலைப்பாட்டை ஏற்றுத் தமிழ்மக்கள் இதுவே தமது பொது நிலைப்பாடு என்று உலகுக்கும் தென்னிலங்கைக்கும் வெளிக்காட்ட பொதுக் கட்டமைப்பின் பொது வேட்பாளராகிய அரியநேத்திரனின் சங்குச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்று அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம்.

பொது வேட்பாளர் ஜனாதிபதியாக வருவதற்காக முன் நிறுத்தப்படவில்லை. அவர் தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்காகவும், கட்சிகளை ஒன்றிணைப்பதற்காகவும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஒருமித்த குரலில் ஒலிக்கச் செய்வதற்காகவுமே முன் நிறுத்தப்படுகின்றார். ஒன்று திரண்ட தமிழ் மக்கள் உலகத்தின் முன்னும் தென்னிலங்கையின் முன்னும் பலமாக நிமிர்ந்து நிற்பார்கள். அதாவது அரியநேத்திரனுக்கு வழங்கப்படும் வாக்குகள் தமிழ் மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கும் வாக்குகள்தான். தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தவர்களைக் கௌரவிக்கும் வாக்குகள்தான். எனவே, தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது தமிழ் மக்களின் தேசிய கடமையாகும். சங்குச் சின்னத்துக்கு ஆகக்கூடிய தமிழ் வாக்குகளை வழங்குவதன் மூலம் அன்பான தமிழ் மக்களே எங்களை நாங்களே வெற்றி பெற வைப்போம்.” – என்றுள்ளது.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# நாளை மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், கொடிகாமம் திருவருள்மிகு பார்வதி சமேத சிவன் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன ஏககுண்ட மகா கும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை அதிகாலை 6.05 மணி முதல் 6.50 மணி வரையிலான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இக் கும்பாவிஷேகத்துக்கான கர்மாரம்பம் கடந்த 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு 31 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகியது. இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிவரை இந்த நிகழ்வு இடம்பெறும். சிவஸ்ரீ இராமலிங்க ஐயா ஆசியுடன் பிரதிஷ்டா பிரதமகுருவும் ஆலய குருவு மாகிய தென் இந்திய பயிற்சிக்குரு மணி சிவாகமரத்தினம் சிவஸ்ரீ இராம.ஸ்ரீரங்கநாதக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.



# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு

(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாத் தொடர் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் இணைந்து நடத்திய இந்த நிகழ்வு பிரதிஅதிபர் ம.தர்மலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டதுடன் நாவிதன்வெளி பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. நீலோந்திரன், திணைக்கள வளவாளர் நா. சனாதனன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளுக்கான சுவாமியின் திருவுருவப்படங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சார்பில் மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி ஏற்பாடுகளை மேற்கொண்டார்.















# விபுலானந்த மணி மண்டபத்தில் நடைபெற்ற கர்நாடக இசைக்கச்சேரி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கர்நாடக இசைக் கச்சேரி ஒன்றை நடத்தின.

முன்னதாக கலைஞர்கள் சுவாமி விபுலானந்த அடிகளாரின் இல்லத்தில் விசேட பூஜை செய்து அவரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக இசைத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஸ்ரீவிக்ரம கீர்த்தி, திருமதி கிருபாஞ்சனா கேதீஸ் கலந்து கொண்டனர்.

இந்தியாவில் இசைத் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்ற அழகரெத்தினம் கல்யாண்சரண்( வாய்ப்பாட்டு ), சுதாகரன் கோவிசரண்(மிருதங்கம்), பிரிசில்லா ஜோர்ஜ் (வயலின்) ஆகியோர் இந்த கர்நாடக இசைக்கச்சேரியை ஒன்றரை மணி நேரம் நடத்தினர்.

நிகழ்வில் விபுலானந்த பணி மன்ற தலைவர் சோ.சுரநுதன் தலைமையுரையாற்ற செயலாளர் கு.ஜெயராஜி அறிமுக உரையாற்றினார்.

கர்நாடக இசைக் கச்சேரி தொடர்பான நயவுரையை பணி மன்றத்தின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா நிகழ்த்தினார். இசைக் கச்சேரி நடத்திய மூன்று கலைஞர்களுக்கும் விபுலானந்த பணி மன்றத்தினர் பொன்னாடை போர்த்தி விபுலனின் திருவுருவப்படம் பொறித்த நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தனர்.




# பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு அநுரகுமார என்ன செய்தார்?

## திருமலை எம்.பி. இம்ரான் மஹ்ரூப் கேள்வி

( அஸ்ஹர் இப்றாஹிம்)

சஜித் தொடர்பாக முஸ்லிம்களைத் தொடர்புபடுத்தி அநுரகுமார செய்யும் விமர்சனம் சிறுபிள்ளைத்தனமானது. பல்வேறு கலவரங்களில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு அநுர என்ன செய்தார்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

மூதூரில் இடம்பெற்ற பொது மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அண்மையில் முஸ்லிம் பிரதேசங்களில் இடம்பெற்ற கூட்டங்களில் அநுர குமார திசாநாயக்க, சஜித் பிரேமதாஸ தொடர்பாகச் சிறுபிள்ளைத்தனமான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

திகன, மினுவாங்கொடை கலவரங்களின் போது சஜித் பிரேமதாஸ என்ன செய்தார்? எனக்கேட்டிருந்தார். ஆனால், ஜனாஸா எரிப்பின் போது சஜித் என்ன செய்தார்? என்று அவர் கேட்கவில்லை. அவரால் அதை கேட்கவும் முடியாது.

சஜித் பிரேமதாஸ அந்த நேரம் என்ன செய்தார்?, அநுரகுமார திசாநாயக்க என்ன செய்து கொண்டிருந்தார்? என்று நான் கூறுகிறேன்.



அச்சம்பவம் இடம்பெற்ற போது சஜித் பிரேமதாஸ நாட்டின் ஜனாதிபதியோ, பிரதமரோ எதிர்க்கட்சி தலைவரோ அல்லது உங்களைப்போன்று ஒரு கட்சியின் தலைவரோ அல்ல. அவர் வீடமைப்பு அமைச்சர் மாத்திரமேயாவார்.

அக்கலவரங்களில் பாதிக்கப்பட்ட மினுவாங்கொடை, குருநாகல் பிரதேச 21 பள்ளிவாயல்களின் புனர்நிர்மாணத்துக்கு சஜித் பிரேமதாஸ நிதியுதவி செய்திருந்தார். அந்த நிகழ்வுகளில் சஜித் பிரேமதாஸவுடன் நானும் முஜிபுர் ரஹ்மானும் கலந்து கொண்டிருந்தோம். அதன் பின் நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் இது தொடர்பாக நானும் முஜிபுர் ரஹ்மான், மரைக்கார் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே குரலெழுப்பியிருந்தோம்.

தெற்காசியாவின் செல்வந்தக் கட்சிகளில் ஒன்றான மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரான அநுரகுமார திசாநாயக்க கலவரங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு ரூபா வழங்கியிருப்பாரா? ஜனாஸா எரிப்பின் போது முழு முஸ்லிம் சமூகமும் ஒன்றிணைந்து வீதியில் இறங்கிப் போராடியது. எம்முடன் தமிழ், சிங்கள சகோதரர்கள் இணைந்து போராடினார்கள்.

அப்போது எங்கே சென்றார் இந்த அநுர குமார திசாநாயக்க?. ஆனால், முஸ்லிம்களோடு அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஒன்றாக இருந்தவர் சஜித் பிரேமதாஸ மட்டுமே.

யாரையும் விமர்சனம் செய்யலாம். ஆனால், அதில் சிறிதளவாவது உண்மை இருக்க வேண்டும். விமர்சனம் செய்ய முன் உங்களையும் சுயவிமர்சனம் செய்து விட்டு விமர்சிக்க வேண்டும். ஆகவே, முஸ்லிம் வாக்குகளை இலக்கு வைத்துப் பொய்களைக் கூறி முஸ்லிம் இளைஞர்களைத் தூண்டி விடுவதை அநுரகுமார திசாநாயக்க நிறுத்த வேண்டும்.

விமல் வீரவன்ஷ மக்கள் விடுதலை முன்னணி ஊடாக அரசியலுக்கு வந்த அக்கட்சி கொள்கையை உடைய ஒருவர். அவ்வாறான கொள்கையுடையவர்கள் அதிகாரத்துக்கு வந்தால் எவ்வாறு செயற்படுவார்கள் என்பதற்கு விமல் வீரவன்ஷவே சிறந்த உதாரணம்.- என்றார்.





# ஸ்ரீ இராமகிருஷ்ணா அரங்கு அக்கரைப்பற்றில் திறந்து வைப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் வலயத்திலுள்ள அக்கரைப்பற்று ஸ்ரீஇராமகிருஷ்ணா தேசிய கல்லூரியில் 1983 க.பொ. த. சாதாரண தரம் பயின்ற மாணவர்களின் அமைப்பான, கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி சங்கத்தினரால் ஸ்ரீஇராமகிருஷ்ணா அரங்கு நேற்று (02) திங்கட்கிழமை காலை ஒன்று கூடலின் போது திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் க.ஜயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதன் தலைவர் உறுப்பினர்கள் கலந்து கொண்டு திறந்து வைத்தனர்.

அமைப்பின் தலைவர் சுந்தரம் சிவபாலன்,செயலாளர் சிவலிங்கம் கனகரெட்ணம், பொருளாளர் சின்னத்தம்பி மணிமாறன், மற்றும் உறுப்பினர்களுக்கு பாடசாலை சார்பில் நன்றி கூறி நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

அதன் போது ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# நாட்டையும், வளங்களையும் சூறையாடிய கள்வர் கூட்டத்தை வீட்டுக்கு அனுப்புவோம்!

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனை தொகுதி அமைப்பாளர்

(எம்.எப்.றிபாஸ்.)

நமது நாட்டையும் நாட்டில் உள்ள வளங்களையும் கையிருப்பில் இருந்த டொலர்களையும் சூறையாடி கொள்ளை யடித்த கள்வர் கூட்டத்தையும் இனவாதி களையும் ஒட்டுண்ணிகளையும் எதிர் வரும் தேர்தலுடன் வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

இவர்கள் தங்களது லேபலை மட்டும் மாற்றி விட்டு நாட்டை சீரழிக்க ஆட்சி பீடம் ஏற நினைக்கிறார்கள். இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

இவ்வாறு கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிர ஸின் கல்முனை தொகுதி அமைப்பா ளருமான சி.எம்.முபீத் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் அண்மையில் நடை பெற்ற அகில இலங்கை மக்கள் காங் கிரஸின் இளைஞர் மாநாட்டில் உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்

இங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவது நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகி இருக்கின்ற நிலையில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பிரதிநிதித்துவப்ப டுத்தும் இளைஞர்களும் இதனுடன்



இணைந்து பயணிக்க வேண்டும்.

எல்லா வகையான வேலைத் திட்டங்களிலும் கொள்ளையடிப்பதையும் சுரண்டுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தவர்களால் தான் இந்த நாடு பெரும் பஞ்சத்தை அனுபவித்தது. இதனால் நாட்டு மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் கொஞ்ச நஞ்சம் அல்ல.

இப்படிப்பட்டவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவது இந்த நாட்டு மக்களுக்கு செய்யும் துரோக மாகும்.

எனவே நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும். அது சஜித் பிரேமதாஸ ஆளுகின்ற ஆட்சியாக அமைகின்ற போது, இந்த நாடும் நாட்டு மக்களும் சுபீட்சம் பெற்றவர்களாக மாற முடியும். எமது தலைவர் ரிசாத் பதியுதீனுடைய கரங்களைப் பலப்படுத் துவதன் மூலம் சஜித் பிரேமதாஸவை வெற்றி பெறச் செய்து நாட்டில் ஒரு நல்லாட்சி மலர நாம் முன்வர வேண்டும்.

மக்களின் ஜனநாயக ஆணையை மீறி அல்லது உதாசீனப்படுத்தி சர்வ தேசத்தின் உதவியோடு ஊழல் மோசடி செய்து நாசகார செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெற முயற்சித்தால் அவ்வாறா னவர்கள் மீண்டும் ஒரு மக்கள் புரட் சியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்ப டும். இதனால் அவர்கள் நாட்டை விட்டு ஓடும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

இளைஞர்களாகிய நாம் கிராமம் கிராமமாக, வீடு வீடாகச் சென்று சஜித் பிரேமதாஸவின் டெலிபோன் சின்னத் துக்கு வாக்களிக்குமாறு மக்களை திரட்ட வேண்டும். இதன் மூலம் ஊழல் நிறைந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து கொள்ளைக் கும்பலை வீட்டுக்கு அனுப்ப முடியும்.

இந்தத் தேர்தலில் கொள்ளை கும் பலுடன் இணைந்து இருக்கும் ரணில் விக்கிரமசிங்க படுதோல்வி அடைவது டன், ஜனநாயகத்தையும் ஜனநாயக ஆட்சியையும் நேசிக்கின்ற சஜித் பிரேமதாஸ அமோக வெற்றி பெற்று இந்த நாட்டின் ஜனாதிபதியாக திகழ்வார் என்பதில் ஐயமில்லை.- என்றார்.

# தனியார் மருத்துவமனை மற்றும் பார்மசிகளில் வைத்தியரது ஆலோசனையின்றி மருந்துகள்!

## இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தெரிவிப்பு

(இறக்காமம் மேலதிக நிருபர் )

இறக்காம பிரதேசத்திலுள்ள தனி யார் மருத்துவமனை மற்றும் பார்ம சிகளில் வைத்திய ஆலோசனையின்றி பயிற்றுவிக்கப்படாத மருந்து கலவை யாளர்களால் மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு வழங்கப்பட்ட மருந்துகளால் சில நோயாளிகள் பாதிப்புக்குள்ளகியுள்ளனர் என்று முறைப்பாடுகள்
கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறு இறக்காமம் சுகாதார வைத் திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.இஸ் மாயில் தெரிவித்தார்.

பொதுமக்களால் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக திடீர் பரிசோதனை ஒன்றை மேற்கொண் டோம். அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் பொதுமக்களால் முறையிடப்பட்ட பிரச்சினைகள் அவதா னிக்கப்பட்டன.-என்றார்.

அதனையடுத்து, இறக்காமம் சுகாதார வைத்து அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட அனைத்து தனியார் மருத்துவ மனைகள் மற்றும் பார்மசி உரிமையா ளர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுத்



தனியார் மருத்துவமனைகள் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என்பது பற்றியும் ஏராளமான தனியார் மருத்து வமனைகளில் பயிற்றுவிக்கப்படாத நபர்களால் மருந்துகள் விநியோகிப்ப தும் மற்றும் இரத்தப் பரிசோதனைக்கான மாதிரிகள் சேகரிக்கப்படுவதும் மிகவும் பொருத்தமற்றவை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவற்றில் ஏற்படுகின்ற பாதகங்கள் தொடர்பாகவும் தெளிபடுத்தி, இவ் வாறான செயற்பாடுகளை இனிமேலும் செய்யக்கூடாது என்று சுகாதார வைத் திய அதிகாரியால் எச்சரிக்கப்பட்ட னர்.

குறித்த முறைப்பாடு தொடர்பான கலந்துரையாடலும், அறிவுறுத்தல்களும் இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றமை குறிப் பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும்!

**ஜனாதிபதியைச் சந்தித்த கிழக்கு மாகாண முன்னாள் மாகாணசபை உறுப்பினர் இராஜேஸ்வரன் நம்பிக்கை**

(வி.ரி. சகாதேவராஜா)

கடந்த பல்லாண்டு காலமாக அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர்நோக்கிவரும் இன்னோரன்ன பிரச்சினைகள் ஜனாதிபதி ரணில் காலத்தில் தீர்த்து வைக்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துப் பேசிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபையின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் நம்பிக்கை தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எனது பூரண ஆதரவை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்குவதாக முடிவெடுத்துள்ளேன் என்றும் அவர் கூறினார்.

இவர் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் கொழும்பு சென்று சந்தித்து இருந்தார். இதனை அடுத்தே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் படும் துன்பங்கள் கொஞ்சநஞ்சம் அல்ல. தொடர்ச்சியாக எமது மக்களை ஏமாற்றிக் கொண்டு ஒரு சில அரசியல்வாதிகள் தங்களுடைய சுயலாபங்களை அடைந்தவையே மிச்சம். எல்லா மாவட்டங்களிலும் ஒப்பிடும் பொழுது அம்பாறை மாவட்ட தமிழ்ப்பிரதேசங்கள் அனைத்தும் பின் தங்கியே காணப் படுகின்றது.

எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களை அங்கு வசிக்கும் மக்களே ஆள வேண்டும். அவர்களுக்கான சகல விதமான முடிவுகளையும் அவர்களே எடுக்க வேண்டும். எதிர்கால சிந்தனை அவ்வாறு இருந்தால் மாத்திரமே இளைஞர்களின் தொழில் வாய்ப்புகளும் சரி அபிவிருத்தியிலும் சரி கொள்கையிலும் சரி எந்தவிதமான குறுக்கீடுகளும் இல்லாமல் சிறந்த முடிவுகள் எட்டப்படும்.

ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு நமது மக்களுக்கான வாய்ப்பாக நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்த வேண்டும்.

இந்த சந்திப்பில் ஜனாதிபதியிடம் கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பாக பேசியிருந்தேன் . நான் மாகாண சபை உறுப்பினராக இருந்த போது நாவிதன்வெளி சம்மாந்துறை கல்முனை வலய தமிழ் பாடசாலைகளை உள்ளடக்கிய கல்முனை வடக்கு கல்வி வலயம் உருவாக வேண்டியதன் அவசியம் கருதி பல முன்னெடுப்புக்களை செய்திருந்தேன். அதனை நிவர்த்தி செய்து தரவேண்டும் எனும் கோரிக்கையையும் முன்வைத்தேன்.

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில், பொத்துவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி , காரைதீவு பிரதேச தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாகவும் விபரித்திருந்தேன். அதனை ஜனாதிபதி கவனமாக செவிமடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவை தொடர்புபடுத்தி வைத்தார்.



ஜனாதிபதி தேர்தல் முடிந்த பின்னர் நாடாளுமன்ற தேர்தல், மாகாண சபைத் தேர்தல்களை எதிர்கொள்ளும் போது தமிழ் கட்சிகள் வாக்குகளைப் பிரிக்காது அனைவரும் தமிழரசுக் கட்சி உட்பட ஒன்றிணைந்து விட்டுக்கொடுப்புடன் ஒரு சின்னத்தில் போட்டியிட்டு ஆசனங்களை பாதுகாக்க வேண்டும்.

நான் மாகாணசபை உறுப்பினராக இருந்த போது முடிந்தவரை பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைச் செய்துள்ளேன். ஆனால், ஏனைய மாவட்டங்களுடன் ஒப் பிடுகையில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கான தேவைகள், பிரச்சினைகள், அபிவிருத்திகளுக்கு தற் போதுவரை தீர்வின்றியே உள்ளன. ஜனாதிபதியுடனான சந்திப்பில் பல விடயங்களை விவரித்திருந்தேன். சாதகமான பதிலை தந்தார்.– என்றார்.






# அரச ஊழியர்கள் தமது வாக்குகளை பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும்

## மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி. தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

தபால்மூல வாக்களிப்பில் அரச ஊழியர்கள் தமது வாக்குகளைப் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும். போலி வாக்குறுதிகளைக்கண்டு ஏமாறக்கூடாது. நடைமுறைக்கு சாத்தியமான விடயங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே முன்வைத்துள்ளார்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நேற்று (02) படிகம பகுதியில் இடம்பெற்ற பிரச்சார கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரனின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கட்சியின் தேசிய அமைப்பாளர் ஏ. பி.சக்திவேல் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துக் கொண்டனர்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு,



இரு வருடங்களுக்கு முன்னர் நாடு எப்படி இருந்தது? வரிசை யுகம் தோற்றம் பெற்றது. நகர் மற்றும் கிராமப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் பெரும் துயரங்களை எதிர்கொண்டனர். சிலர் பட்டினியில்கூட வாடினார்கள். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியை பொறுப்பேற்ற பின்னர் வரிசை யுகத்துக்கு முடிவுகட்டி நாட்டை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்.

மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்கப்பட வேண்டும் என எமது பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்தார். அதற்கும் தீர்வு வழங்கப்பட்டுள்ளது. வீட்டுப் பிரச்சினைக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. கல்வி சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனால்தான் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்குமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம். ஒரு வருட காலப்பகுதிக்குள் அவர் பாரிய அபிவிருத்திகளை முன்னெடுத்துள்ளார். எனவே, அவருக்கு இன்னும் ஐந்தாண்டுகள் வழங்கினால் நாடும், மக்களும் நிச்சயம் முன்னேறுவார்கள்.

ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கிலேயே சிலர் போலியான, நடைமுறைக்கு சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கிவருகின்றனர். இதற்கு மக்கள் ஏமாறக்கூடாது. கல்வி வளர்ச்சியில்தான் எமது சமூகத்தின் முன்னேற்றம் தங்கியுள்ளது. ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தபால்மூல வாக்களிப்பு இடம்பெற வுள்ளது.

எனவே, அரச ஊழியர்கள் தமது வாக்கை சரிவர பயன்படுத்த வேண்டும். அரச ஊழியர்களின் கோரிக்கைகளையும் ஜனாதிபதி நிறைவேற்றி வருகின்றார். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது. எனவே, அரச ஊழியர்கள் பொறுப்புடன் வாக்களிக்க வேண்டும். போலி வாக்குறுதிகளை நம்பி வாக்களித்தால், நாடு இருக்காது.- என்றார்.





# மட்டக்களப்பு - திருகோணமலை கிரிக்கெட்; சம்பியனானது மட்டக்களப்பு சிவானந்தா!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி 29 ஆவது தடவையாக ஒழுங்கு செய்திருந்த திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரிக்கும், மட்டக்களப்பு ,கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரிக்கும் இடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கட் சமர் கடந்த சனிக்கிழமை திருகோணமலை ஆர்.கே.எம். ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பாடிய திருகோணமலை அணி 32.5 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றது.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 13.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

திருகோணமலை இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற சமரில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் கே.சிவகுமார் பிரதம அதிதியாகவும், திருகோணமலை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.பரமேஸ்வரன் கௌரவ அதிதியாகவும், சிறுவர் கல்வி உதவிகள் அமைப்பின் சர்வதேச இணைப்பாளர் எஸ்.கங்காதரன் மற்றும் கனடா சி.ஈ.டி. கிங் குறாப் பணிப்பாளர் பெஞ்சமின் லோரன்சுப்பிள்ளை, மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி அதிபர் எஸ். தயாபரன் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

சிறந்த துடுப்பாட்ட வீரராக மட்டக்களப்பு அணியைச் சேர்ந்த துவாதரன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பந்து வீச்சாளராகவும், சிறப்பாட்டக்காரராகவும் மட்டக்களப்பு சிவானந்தா அணித் தலைவர் நிருபன் தெரிவு செய்யப்பட்டார்.

ஆர்.தினேஸ்குமார் பொறுப்பாசிரியராகவும், ரீ.திசாந்தன் பயிற்றுவிப்பாளராகவும் இருந்து மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி கிறிக்கட் அணியின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.










# சஜித்தின் வெற்றிக்காக உழைக்கவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

## பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை பிரதேசத்தில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தேர்தல் குழுக்களின் கூட்டம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம். மன்சூர் தலைமையில் சம்மாந்துறை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, உச்ச பீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளருமான ஏ.சீ. சமால்டீன், உயர்பீட உறுப்பினரும் முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.எம்.சௌபீர், உயர்பீட உறுப்பினர் அஸீஸ், மத்திய குழு செயலாளர் அசாருதீன், முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ். நழீம், சம்மாந்து இளைஞர் அமைப்பாளர் அர்சாத் இஸ்மாயில், கிளை தலைவர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது தபால் மூலம் வாக்களிக்க உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களின் விசேட கடிதத்தை வழங்குதல், ஜனாதிபதி தேர்தல் தொடர்பான பொதுக் கூட்டங்கள், வட்டார ரீதியான கருத்தரங்குகள், வட்டார ரீதியான காரியாலங்கள் திறத்தல், வட்டார ரீதியான வீடு வீடாகச் செல்லும் செயற்பாடுகளை முன்னெடுத்தல், சம்மாந்துறை பிரதேசத்தில் இதுவரைக்கும் புணரமைக்க படாமல் உள்ள கிளைகள், இளைஞர் கிளைகள், மகளிர் கிளைகளையும் புனரமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.




# முற்றிலும் இலவசமாக நடந்த ஆயுள்வேத மருத்துவ முகாம்!

(அபு அலா)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு சமூர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க அனுசரணையின் கீழ் சத்துருக் கொண்டான் சுதேச ஆயுள்வேத மத்திய மருந்தகத்தால், மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கொக்குவில் பிரதேச மக்களுக்கு முற்றிலும் இலவசமாக ஆயுள்வேத மருத்துவ முகாமொன்று இன்று (03) கொக்குவில் பல்தேவை கட்டடத்தில் நடைபெற்றது.

கொக்குவில் பிரதேச மக்களின் தேவை கருதியும், அவர்களின் ஆரோக்கியமான வாழ்வை கருத்தில் கொண்டு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி எஸ்.சிறிகாந்தின் வேண்டுகோளுக்கிணங்க, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீலின் அனுமதியுடன், சத்துருக்கொண்டான் ஆயுள்வேத மத்திய மருந்தகத்தின் வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி எஸ்.சஜிதா தலைமையில் இந்த இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.



இந்த இலவச மருத்துவ முகாமில் நூற்றுக் கணக்கான பொது மக்கள் வருகை தந்து தங்களது நோய் தொடர்பில் மருத்துவ ஆலோசனைகளையும் மருந்துகளையும் பெற்றுக் கொண்டனர்.

இந்த மருத்துவ முகாமில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி எஸ்.சிறிகாந், மண்முனை வடக்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் சதாகரன் சுபா, சமூர்த்திப் பணிப்பாளர் வி.பிரைசூடி, மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சத்துருக்கொண்டான் ஆயுள்வேத மத்திய மருந்தக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




# நிறைவேறியது கனவு!

## தமிழக மக்களின் மகிழ்ச்சியே முக்கியம்

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவிப்பு

"பட்டா வேண்டும் என்ற பல வருட கனவு இன்று நிறைவேறியுள்ளது. தமிழக மக்களின் மகிழ்ச்சியே முக்கியம்" என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவொற்றியூர் தொகுதியில் வீட்டுமனை பட்டா இல்லாமல் இருந்த பொதுமக்கள் வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும் என்று தேர்தல் பிரசாரத்தின் போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை ஏற்று உடனடியாக அதிகாரிகள் மூலம் ஆய்வு செய்யப்பட்டது. அதில் முதல் கட்டமாக 2 ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வீட்டுமனை பட்டாக்களை இன்று வழங்கினார்.

இதன்போது பேசிய அவர்,

"2021ஆம் ஆண்டு தேர்தலில் அதிகபடியான வாக்குகளைப் பெற்று வெற்றியடைய செய்த மக்களுக்கும் கழகத்திற்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் ஆட்சிக் காலத்தில் 1970இல் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை தொடங்கினார்.



இதன் மூலம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஜூலை மாதத்தில் ரூ.920 கோடி செலவில் 60 குடியிருப்புகளை ஒன்லைன் மூலம் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் முதல் முறையாக ஒன்லைன் மூலம் வடசென்னை பகுதியில் ரூ.4 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் வடசென்னை வளர்ச்சித் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் மக்களுக்கு வழங்கப்பட உள்ளது.

பட்டா வேண்டும் என்ற பல வருட கனவு இன்று நிறைவேறியுள்ளது. சென்னையில் பட்டா பிரச்சினை பல ஆண்டுகளாக உள்ளது. பட்டா வழங்கப்படும் என்று முதலமைச்சர் வாக்குறுதியை செயல்படுத்தி உள்ளார்.

எத்தனை சிக்கல் வந்தாலும் பரவாயில்லை. மக்களுடைய மகிழ்ச்சிதான் முக்கியம்.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் அறிமுகம் செய்தார். இதன் மூலம் ஒவ்வொரு நாளும் 20 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்.

புதுமைப்பெண் திட்டம் மூலம் அரசு பள்ளியில் படித்த பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் தொகை வழங்கப்படுகிறது. 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் மாதம் ஆயிரம் ரூபா கல்வி ஊக்கத்தொகை பெறுவார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் ஒரு கோடியே 46 லட்சம் பெண்கள் பயன் பெறுகிறார்கள். தரமான கல்வி, சுகாதாரம் என்று இந்தியாவில் முதலிடம் பிடித்துள்ளோம்.

அரசின்பிராண்ட்அம்பாசிடர்மக்களாகிய நீங்கள்தான். இந்த அரசை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

– இவ்வாறு அவர் பேசினார்.




# சிறைக்குள் தீ; கைதிகள் தப்ப முயன்றதால் நெரிசல் - துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி

# 129 பேர் சாவு!

கொங்கோவில் சிறையிலிருந்து தப்பிச்செல்ல முயன்றபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் மூச்சுத்திணறல் மற்றும் துப்பாக்கி சூட்டில் மொத்தம் 129 கைதிகள் உயிரிழந்தனர்.

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவின் தலைநகர் கின்ஷாசா அருகே மகலா என்ற பகுதியில் சிறைச்சாலை உள்ளது. கொங்கோவின் மிகப்பெரிய சிறைச்சாலை இதுவாகும்.

இச்சிறைச்சாலையில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் அடைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, ஆயிரத்து 500 கைதிகள் வரை அடைக்கும் வசதிகொண்ட இச்சிறைச்சாலையில் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இச்சிறைச்சாலையில் நேற்று இரவு தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்தத் தீ விபத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி கைதிகள் சிறையிலிருந்து தப்பிச்செல்ல முயன்றுள்ளனர். ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான கைதிகள் சிறைக் கதவுகளை உடைத்துக் கொண்டு தப்பிச்செல்ல முயன்றுள்ளனர். அப்போது, கைதிகளுக்கு இடையே கூட்ட நெரிசல் ஏற்பட்டுள்ளது. கூட்ட நெரிசலில் கைதிகள் பலருக்கும் மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது.

மூச்சுத்திணறலில் மயக்கமடைந்த கைதிகள் பலரும் சுருண்டு விழுந்து உயிரிழந்தனர். அதேவேளை, தப்பிச் செல்ல முயன்ற சிறைக்கைதிகள் சிலர் மீது பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். சிறையிலிருந்து தப்பிச்செல்ல முயன்றபோது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் மூச்சுத்திணறல் மற்றும் துப்பாக்கி சூட்டில் மொத்தம் 129 கைதிகள் உயிரிழந்தனர்.

இதையடுத்து, சிறைச்சாலைக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இச்சம்பவம் தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.



## நாளொன்றுக்கு 30 நிமிடங்கள் நித்திரை

# ஆச்சரியம்!

ஜப்பானைச் சேர்ந்த 40 வயதுடைய டைசுக்கே ஹோரி என்பவர் கடந்த 12 வருடங்களாக நாள் ஒன்றுக்கு 30 நிமிடங்களே நித்திரை செய்து வருகிறார்.

வடக்கு ஜப்பானில் உள்ள ஹியோகோ மாகாணத்தைச் சேர்ந்த ஹோரி தனது உடலையும் மூளையையும் குறைந்த நித்திரைக்குப் பழக்கப்படுத்தியுள்ளார் எனவும், அதன் மூலம் தனது செயல்படும் திறன் அதிகரித்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

நீண்ட நேர நித்திரையை விட ஆழமான குட்டித் தூக்கம் உங்களின் செயல்திறனை மேம்படுத்தவும், வேலைத் திறனை அதிகரிக்கவும் உதவும், உதாரணமாக மருத்துவர்கள், தீயணைப்பு வீரர்கள் ஆகியோர் குறைந்த நேரம் ஓய்வெடுத்தாலும் அதிக ஊக்கத்துடன் செயல்படுகிறனர் என்று ஹோரி தெரிவித்துள்ளார்.

யோமியூரி என்ற தொலைக்காட்சி ஹோரியின் அன்றாட செயல்பாடுகளை 3 நாட்களுக்குத் தொடர்ந்து Will You Go With Me? என்ற நிகழ்ச்சியாக ஒளிபரப்பியது. ஆச்சரியப்படும் வகையில் நாள் ஒன்றுக்கு 26 நிமிடங்களே நித்திரை செய்த ஹோரி மிகவும் சுறுசுறுப்பாகத் தனது வேலைகளைச் செய்துள்ளார்.

உணவு உண்பதற்குப் பல மணி நேரத்துக்கு முன்னர் உடற்பயிற்சி செய்வதும், கோப்பி குடிப்பதும் நித்திரைக் கலக்கத்தை நீக்கும் என்று தெரிவித்துள்ளார் ஹோரி. 2016 முதல் குறைந்த தூக்கத்திற்கான பயிற்சி வகுப்புகளை எடுத்து வருகிறார். இதற்காக இதுவரை இரண்டாயிரத்து 100 பேரை ஹோரி தயார் படுத்தியுள்ளார்.



கனடா முரசு

பக்கங்கள் 09

செவ்வாய்க்கிழமை 03/09/2024

## ரொறன்ரோவில் சூடு! ஒருவருக்குக் காயம்!!

ஒன்ராரியோ, செப்ரெம்பர் 03 வடமேற்கு ரொறன்ரோவில் வார இறுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஆண் ஒருவர் உயிருக்கு ஆபத்தான படுகாயங்களுடன் மருத்துவ

02




# பிரதமர் ட்ரூடோவுடன் வாதிட்ட தொழிலாளி!

**பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கனடாவில் எஃகு தொழிலாளர்களுடன் பேச வந்த போது ஓர் ஊழியரின் எதிர்ப்பை எதிர் கொண்டார்.**

**அவர் வெள்ளிக்கிழமை ஒரு தொழிற்சாலைக்குச் சென்று அங்க்ஹ் ஊழியர்களுடன் படங்களுக்கு போஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்.**

**அப்போது குறுக்கிட்ட ஊழியர் ஒருவர் நாட்டில் பணவீக்கம் மற்றும் அதிக வரிகள் குறித்து அவரை விமர்சிக்கத் தொடங்கினார்.**

**ட்ரூடோவின் கொள்கைகளால் தனது குடும்பம் வாழ்வாதாரத்தை சமாளிக்க முடியாமல் தவிப்பதாக அந்த நபர் ட்ரூடோவிடம் கூறினார்.**

**ட்ரூடோவின் வாக்குறுதிகளைக் கேட்டு கோபமடைந்த தொழிலாளி தொடர்பான வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.**

அதில் "சீனா மீது நாங்கள் கொண்டு வந்துள்ள 25 சதவீத வரி உங்களுக்கு உதவும். உங்கள் வேலை பாதுகாப்பாக இருக்கும். நான் உங்களிடமும் உங்கள் வேலையிலும் முதலீடு செய்யப் போகிறேன்" - என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறுகின்றார்.

அவர்களின் வாக்குறுதிகளைக் கேட்டு, அங்கு நின்ற ஒரு எஃகு தொழிலாளி கோபமடைந்தார். "நான் செலுத்தும் 40 சதவீத வரியின் நிலை என்ன? எனக்கு ஒரு டாக்டர் கூட இல்லை. எனது காப்பீட்டிற்கும் நான் பணம் செலுத்துகிறேன். முழுநேர வேலை இருந்தபோதிலும், எனது மனைவி மற்றும் குழந்தைகளை ஆதரிப்பது கடினமாக இருக்கின்றது" - என அந்த ஊழியர் கூறினார்.

"நீங்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிட விரும்புகிறீர்கள் என்று நினைக்கிறேன். ஆனால் நீங்கள் மீண்டும் பிரதமராவதை நாங்கள் விரும்பவில்லை" என்றும் அந்த ஊழியர் கூறினார்.

இதற்கு பதிலளித்த ட்ரூடோ, "அதனால்தான் தேர்தல் நடக்கிறது. அனைவரும் வாக்களிப்பார்கள் என்று நம்புகிறேன். நாங்கள் உங்களிலும் உங்கள் வேலையிலும் முதலீடு செய்வோம்." - என்றார்.

அதற்குப் பதிலளித்த அந்த ஊழியர், 'நீங்கள் சொல்வதை நான் ஒரு நொடி கூட நம்ப மாட்டேன்" என்று கூறினார்.

கனடா அரசாங்கம் சமீபத்தில் சீன எஃகு மற்றும் அலுமினியத்திற்கு 25 வீத வரியை அறிவித்தது. அதைத் தான் ட்ரூடோ வீடியோவில் பேசினார். சீனாவில் தயாரிக்கப்படும் மின்சார வாகனங்களுக்கு கனடா 100 வீத வரி விதித்துள்ளது. அமெரிக்காவும் வரி விதித்த பின்னர் கனடாவின் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீன அரசாங்கம் தனது தொழில் துறைக்கு தேவையற்ற மானியங்களை வழங்குவதாகவும், இதனால் அவற்றின் விலை மலிவடைவதாகவும் மேற்கத்திய அரசாங்கங்கள் கூறுகின்றன. இதனால் மற்ற நாடுகளில் உள்ள நிறுவனங்கள் பாதிக்கப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

# கனடாவில் சர்வதேச மாணவர்களுக்கு இனி வாரத்தில் 24 மணி நேரம் மட்டுமே வேலை!

## வாய்ப்புகளை இறுக்குகின்றது அரசு








ஒன்ராரியோ, செப்ரம்பர் 03

தொடர்ந்து புலம்பெயர்ந்தோருக்கு கட்டுப்பாடுகள் விதித்து வரும் கனடா அரசு, சர்வதேச மாணவர்களுக்கு மீண்டும் ஒரு கட்டுப்பாட்டை விதித்துள்ளது.

கல்வி கற்க வந்துள்ள சர்வதேச மாணவர்கள், வாரம் ஒன்றிற்கு 24 மணி நேரம் மட்டுமே பணி செய்ய அனுமதி என கனடா அரசு முடிவு செய்துள்ளது.

இந்த விதி, இம்மாதம் அமுலுக்கு வருகிறது.

கனடாவுக்கு கல்வி கற்க வரும் மாணவர்கள், கல்வியில் மட்டுமே கவனம் செலுத்துவதற்காக இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

ஆனால், இப்படி வேலை செய்வதற்கு கட்டுப்பாடு விதிப்பது மாணவர்களை பொருளாதார ரீதியாக பாதிக்கும் என மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து கனடாவுக்குக் கல்வி கற்கச் சென்றுள்ள நீவா பட்டர்பேகர் என்னும் மாணவி, இதுவரை வாரம் ஒன்றிற்கு 40 மணி நேரம் வேலை செய்துவந்தார்.

ஏற்கனவே செலவுகளைக் குறைப்பதற்காக வேறு இரண்டு மாணவிகள் தங்கியிருக்கும் அறை ஒன்றிற்கு மூன்றாவது நபராகத்தான் சென்று தங்கியிருக்கின்றார் என அவர் தெரிவிக்கிறார்.

மளிகைப் பொருட்கள் வாங்குவதையும், வெளியே சாப்பிடச் செல்வதையும் தான் குறைத்துவிட்டதாகத் தெரிவிக்கும் நீவா, இப்போது வேலை செய்ய அனுமதிக்கும் நேரத்தை 24 மணி நேரமான குறைக்க அரசு எடுத்திருக்கும் முடிவு, தன்போன்ற மாணவ மாணவியரை மேலும் கடுமையாக பாதிக்கும் என்கிறார்.




## ரொறன்றோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.


பிளாக் க்ரீக் மற்றும் ட்ரெத்வே டிரைவ்களுக்கு அருகில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

இரவு 7:46 மணியளவில் சம்பவ இடத்திற்கு பகுதிக்கு அழைக்கப்பட்ட பொலிஸார், அங்கு, ஒரு ஆண் காயங்களுடன் இருப்பதைக் கண்டறிந்து அவரது உயிரரைக் காக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

சந்தேகநபர்கள் அடர்நிறம், நான்கு கதவுகள் கொண்ட செடான் வாகனத்தில் தப்பிச் சென்றனர் ர்னப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கு என்ன விடயம் தூண்டுதலாக இருக்கலாம் என்பது பற்றிய சந்தேகத்திற்கிடமான விவரங்களை பொலிஸார் வெளியிடவில்லை.

இந்த சம்பவம் பற்றி தகவல் தெரிந்தவர்கள் யாரேனும் ரொறன்ரோ பொலிஸாரையோ அல்லது குற்றத்தைத் தடுப்பவர்களையோ அநாமதேயமாகவேனும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.




# பிரிட்டிஷ் கொலம்பியாவில் மின்னல்,காட்டுத் தீ ஆபத்து

பிரிட்டிஷ் கொலம்பியா, செப்ரெம்பர் 03

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் அதிகரிக்கும் வெப்பநிலை காரணமாக காட்டுத் தீ மற்றும் இடி மின்னலுக்கான ஆபத்து அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் கரையோரங்களைத் தவிர ஏனைய இடங்களில் வெப்பநிலை குறைந்து காணப்படலாம் என எதிர்வு கூறப்படுகின்ற போதிலும், காட்டுத் தீ காணும் இடங்களில் மாற்றம் எதுவும் இல்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் செப்ரம்பர் மாதத்தில் கரையோரத்தில் சராசரியாக 20 பாகை செல்சியஸாகவும், தென்பகுதிகளில் சராசரியாக 25 பாகை செல்சியஸாகவும் இருக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.




# புலனாய்வுப் பத்திரிகையாளர் ஸ்டீவி கேமரூன் காலமானார்

ஜெட் விமானம் வாங்குவதில் பிரதமர் ஈடுபட்டமை முதல் பிரிட்டிஷ் கொலம்பியா பன்றி பண்ணையில் பெண்கள் கொல்லப்பட்டமை வரையிலான தலைப்புகளை கையாளும் புத்தகங்களை எழுதிய புலனாய்வுப் பத்திரிகையாளர் உயிரிழந்துள்ளார்.

பார்கின்சன் பாதிப்புக்குள்ளாகியிருந்த 80 வயதான ஸ்டீவி கேமரூன் வார இறுதியில் ரொறன்றோவில் இருந்த வீட்டில் உயிரிழந்தார் என அவரது மகள் ஏமி கேமரூன் தெரிவித்துள்ளார்.

புதிய ஏர்பஸ் ஜெட் விமானங்களை வாங்குவதில் முன்னாள் பிரதமர் பிரையன் முல்ரோனியின் ஈடுபாடு குறித்து அவர் செய்த விசாரணை கேமரூனின் மிகவும் பிரபலமான படைப்புகளில் ஒன்றாகும்.

றோயல் கனேடிய மவுண்டட் பொலிஸார் சொந்த விசாரணையைத் தொடங்கியபோது, கேமரூன் ஒரு தகவலறிந்தவர் என்று குற்றம் சாட்டப்பட்டார்.

இது பின்னர் கேள்விக்குள்ளாக்கப் பட்டது. அவர் அதனை கடுமையாக மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# சட்டப் பேராசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளை இடையூறு செய்யாதீர்

## மெக்கில் பல்கலைக்கு தீர்ப்பாயம் உத்தரவு

கியூபெக், செப்ரெம்பர் 03

கியூபெக்கின் தொழிலாளர் தீர்ப்பாயம் மெக்கில் பல்கலைக்கழகம் முழுநேர சட்டப் பேராசிரியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கத்திற்கு இடையூறு செய்வதையும் குறுக்கிடுவதையும் நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

ஓகஸ்ட் 30 ஆம் திகதி எடுக்கப்பட்ட முடிவின்படி, அதன் நிர்வாகம் சட்டப் பேராசிரியர்களுக்கு தொழிற்சங்கத்தை விமர்சித்து இரண்டு மின்னஞ்சல்களை அனுப்பியபோது, பல்கலைக்கழகம் கியூபெக் தொழிலாளர் குறியீட்டை மீறியதாகத் தோன்றுகிறது என்று தீர்ப்பாயம் கண்டறிந்தது.

வகுப்புகள் தொடங்கும் நேரத்தில் வரம்பற்ற வேலைநிறுத்தத்தை மீண்டும் தொடங்க முடிவு செய்வதற்கு முந்தைய நாள்களில் சட்ட ஆசிரியர்களுக்கு மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டன.

இரண்டு மின்னஞ்சல்களும் ஒரு முக்கியமான தருணத்தில் 'தொழிற்சங்கத்தின் நம்பகத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்த' முயற்சித்ததாக தீர்ப்பாயம் கண்டறிந்தது.

மேலும் எதிர்காலத்தில் சட்டப் பேராசிரியர்களுடன் தொடர்புகொள்வதற்கு முன்பாக தொழிற்சங்கத்திற்கு தெரிவிக்குமாறும் மெக்கில் பல்கலைக்கழகத்திற்கு தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

இந்த முடிவு 'நிகழ்வுகளின் குறிப்பிடத்தக்க திருப்பம்' என்று மெக்கில் சட்டப் பேராசிரியர் ரிச்சர்ட் ஜாண்டா கூறினார், அவர் மெக்கில் சட்டப் பேராசிரியர்கள் சங்கத்தின் செயலாளரும் தலைமை பேச்சாளருமாவர்.

# பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில் கனடாவுக்கு முதல் தங்கம்!

ஒன்ராரியோ, செப்ரெம்பர் 03

2024 பரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டியின் ஐந்தாவது நாளில் கனடா முதலாவது தங்கப் பத்தக்கத்தை வென்றுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின், பார்க்ஸ்வில் பகுதியைச் சேர்ந்த 20 வயதான நீச்சல் வீராங்கனை நிக்கோலஸ் பென்னட் 100 மீற்றர் பிரஸ்ட்ரோக் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றார்.

இதேவேளை, போட்டியின் நான்காவது நாளில் கனடிய அணி இரண்டு வெள்ளி பதக்கங்களை வெற்றி பெற்றது.

நீச்சல் போட்டியில் ஒரேல் ரிவர்ட், சக்கர நாற்காலி பந்தய வீரர் பிரன்ட் லகேடொஸ் ஆகியோர் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.

இந்த நிலையில் பெரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டியின் ஐந்தாவது நாள் முடிவில் கனடா ஒரு தங்கம், நான்கு வெள்ளி, நான்கு வெண்கலம் என மொத்தம் ஒன்பது பதக்கங்களை வெற்றி பெற்றுள்ளது.






# பொலிஸ் அதிகாரிகளின் சூட்டில் 15 வயதுச் சிறுவன் உயிரிழந்தான்

அல்பேர்ட்டா, செப்ரெம்பர் 03

எட்மன்டன் நகருக்கு தெற்கே 15 வயதுச் சிறுவன் பொலிஸ் அதிகாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளான்.

வெட்டாஸ்கிவின் நகரில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பலியானவர் சம்சன் க்ரி முதல் குடியை சேர்ந்த சிறுவன் எனத் தெரியவருகிறது.

ஆயுதங்களுடன் அடையாளம் காணப்பட்ட இந்தச் சிறுவனிடம் இருந்து அவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

ஆனாலும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் அந்தச் சிறுவனுக்கும் இடையில் நிகழ்ந்த ஒரு 'மோதல்' பொலிஸ் அதிகாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளும் நிலையை தோற்றுவித்தது.

இதில் காயமடைந்த சிறுவன், பின்னர் வைத்திய சாலையில் மரணமடைந்தான் எனப் பொலிஸ் தரப்பு ஓர் அறிக்கையில் தெரிவித்தது.

இந்த சம்பவம் குறித்து வெட்டாஸ்கிவின முதல்வர் டைலர் கன்டம் அதிர்ச்சி வெளியிட்டார்.





# அநாகரீக சைகளைக் காண்பித்தவர் ரொறன்ரோ பொலிஸாரால் கைது!

கனடாவின் ரொறன்ரோவில் பாலியல் குற்றச்செயலில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குடியிருப்புத் தொகுதி ஒன்றில் வசித்து வந்த இந்த நபர் அருகாமையில் சென்ற பெண்கள் மற்றும் பதின்ம வயதுடைய சிறுமியர் போன்றவர்களை மறித்து பாலியல் ரீதியான தகாத சைகைகளை செய்து காண்பித்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ரொறன்ரோ பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ப்ளோர் மற்றும் பத்ரஸ்ட் வீதிகளுக்கு அருகாமையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 43 வயதான அடல் நஜிக்கோல் என்ற ரொறன்ரோவைச் சேர்ந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாலியல் ரீதியான துன்புறுத்தல் குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மேலும் பலரை இவ்வாறு துன்புறுத்தி இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்ய முடியும் அல்லது அது குறித்த தகவல்களை வழங்க முடியும் என ரொறன்ரோப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# நில அதிர்வுகள் குறித்து எச்சரிக்கும் முறைமை பிரிட்டிஷ் கொலம்பியாவில் அறிமுகமாகின்றது

கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் நில அதிர்வுகள் குறித்த எச்சரிக்கை முறைமை யொன்றை அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இந்தப் புதிய முறையின் கீழ் மாகாண மக்களுக்கு முன்னறிவிப்புக்கள் விடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

தானியங்கி அடிப்படையில் அலைபேசிகள், வானொலிகள் மற்றும் தொலைக்காட்சிகள் ஊடாக நில அதிர்வு தொடர்பில் முன் அறிவிப்புகள் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாரிய நில அதிர்வுகளை கண்டறிந்து அவை தொடர்பில் இவ்வாறு முன்னெச்சரிக்கை அறிவிப்புக்கள் வெளியிடப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் மத்திய அரசாங்கத்தின் இயற்கை வள மற்றும் சக்தி வளத்துறை அமைச்சர் ஜொனதன் வில்கின்ஸன் இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ளார்.

வலுவான நில அதிர்வுகள் ஏற்பட முன்னதாக எச்சரிக்கைகள் விடுக்கப்பட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

நில அதிர்வு ஏற்படுவதற்கு சில நொடிகளுக்கு முன்னதாக இந்த முன்னெச்சரிக்கையை விடுக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த முன்னெச்சரிக்கை தொடர்பான கால அவகாசம் போதுமானது அல்ல என்ற போதிலும் ஆபத்துக்கு முன்னரான ஒவ்வொரு நொடியும் முக்கியமானது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கனடா எல்லை வழியே அமெரிக்காவிற்குள் சட்ட விரோதமாக நுழைகின்ற இந்தியர்கள்!

கனடா எல்லை வழியே அமெரிக்காவிற்குள் சட்ட விரோதமாக நுழையும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அமெரிக்க எல்லை பாதுகாப்புத் துறைப் புள்ளி விவரங்களில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஜனவரி - ஜூன் காலகட்டத்தை ஒப்பிடுகையில், நடப்பாண்டு இதே காலகட்டத்தில் எண்ணிக்கை 47 வீதம் அதிகரித்துள்ளது. கடந்த ஜூனில் மட்டும் 5,152 இந்தியர்கள் சட்ட விரோதமாக உள்நுழைந்தனர் எனத் தெரிவிக்கப்படிகின்றது.

இந்த எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக அமெரிக்காவில் நுழையும் இந்தியர்களின் எண்ணிக்கை ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பதால் கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க எல்லைப் பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.





# மிசிசாகாவில் வன்முறை சம்பவங்கள்!

கனடாவில் அண்மையான நாட்களாக பல்வேறு வன்முறை சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

மிசிசாகா பகுதியில் நேற்றைய தினம் மூன்று பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர். ஒருவர் கத்தி குத்துக்கு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

இந்த சம்பவங்களில் காயமடைந்தவர்களுக்கு உயிராபத்து கிடையாது என பீல் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் ஏர்வுட் மற்றும் கமாடோ வீதிகளுக்கு அருகாமையில் சென்று பார்த்தபோது இரண்டு ஆண்கள் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி காயம் அடைந்திருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் உடனடியாக வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பின்னர் மற்றும் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் எனவும் மேலும் ஒருவர் கத்தி குத்துக்கு இலக்கானார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சம்பவங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவை என நம்புகன்றார்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் இருந்தால் அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# வடக்கு ஒன்றாரியோவில் 27 இடங்களில் காட்டுத்தீ

கனடாவின் வடக்கு ஒன்றாரியோ பகுதியில் சுமார் 27 இடங்களில் காட்டுத்தீப் பரவுகை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வட கிழக்கு பகுதியில் இவ்வாறு காட்டுத்தை அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் காட்டுத்தீச் சம்பவங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன எனவும் இவற்றில் ஐந்து காட்டுத்தீச் சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒப்பீட்டளவில் இந்தக் காட்டுத்தீ சம்பவங்கள் பாரதூரமான ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடியவை அல்ல எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவங்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன என அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டில் கனடாவின் சில பகுதிகளில் பாரியளவிலான காட்டுத்தீச் சம்பவங்களினால் பேரழிவுகள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# நைஜீரிய சமூகத்தை இணையம் மூலமாக அச்சுறுத்திய பெண் பொலிஸாரால் கைது


கனடாவில் ரொறன்ரோவில் இணையத்தின் ஊடாக நைஜீரிய சமூகத்தை அச்சுறுத்திய பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் 28 ஆம் திகதி இந்த அச்சுறுத்தல் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 25ஆம் திகதி நைஜீரிய சமூகத்தை அச்சுறுத்தும் வகையிலான காணொலி ஒன்றை இந்தப் பெண் சமூக ஊடகங்களில் வெளியிட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் 46 வயதான அமெக்கா சொன்பெர்கர் என்ற பெண் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த அச்சுறுத்தல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# ரொறன்ரோவில் பெண் பயணியிடம் தவறாக நடந்த டாக்சி சாரதி கைது



கனடாவின் ரொறன்ரோ பகுதியில் பெண் பயணி ஒருவரிடம் தகாத முறையில் நடந்து கொண்ட டாக்ஸி சாரதி ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பெண் பயணி ஒருவரை பாலியல் ரீதியாக இந்த நபர் துன்புறுத்தி உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோவின் பிரிட்ஜ் மவுண்ட் மற்றும் டான்போர்த் வீதிகளுக்கு அருகாமையில் கடந்த 28 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

47 வயதான சபீர் ஹுசைன் சீமா என்ற நபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் ரீதியாக துன்புறுத்தியமை உள்ளிட்ட இரண்டு குற்றச்சாட்டுகள் இந்நபர் நபர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்த நபர் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான துன்புறுத்தல்களில் எவரேனும் பாதிக்கப்பட்டிருந்தால் அந்த விடயங்கள் தொடர்பில் அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# பிராம்டன் பகுதியில் வாகனத்துக்குள் ஒருவர் துப்பாகியால் சூட்டுக் கொலை

கனடாவின் பிராம்டன் பகுதியில் வாகனம் ஒன்றில் வைத்து இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய ஒருவரை பீல் பிராந்திய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்த போது நபர் ஒருவர் வாகனத்தில் படுகாயம் அடைந்த நிலையில் இருப்பதை அவதானித்துள்ளனர்.

அந்நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சுமார் 20 வயது மதிக்கத்தக்க ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த நபர் ஓர் படுகொலையை மேற்கொண்டு உள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு என்ன காரணம் என்பது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை.

சம்பவத்தில் உயிரிழந்தவர் மற்றும் கைது செய்யப்பட்டவர் பற்றிய ஆள் அடையாள விபரங்களும் கூட வெளியிடப்படவில்லை. பீல் பிராந்திய பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# அல்பர்ட்டா மாகாணத்தில் கரடி தாக்கி ஒருவர் காயம்

கனடாவின் அல்பர்ட்டா மாகாணத்தில் நேற்று முன்தினம் காலை வேளையில் கரடியின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அல்பர்ட் கல்கரி ராக்கி வியூ பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

படுகாயம் அடைந்த நபர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பொலிஸாரும் அல்பர்ட்டா வனவளப் பாதுகாப்பு அதிகாரிகளும் பிரசன்னமாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

